Why, O God, Why?

(TAMIL)

ஏன், தேவா, ஏன்?

R. ஸ்டான்லி, 5 மே 2021

கரோனா நோய்த் தொற்றினால் ஏற்படும் தினசரி இறப்புகள் நமது மனதில் எழுப்பிக்கொண்டேயிருக்கும் கேள்வி இதுவே. பக்தி நிறைந்த பலரும், தேவ ஊழியரும் அடுத்தடுத்து இறப்பது கிறிஸ்தவ விசுவாசிகளின் மனதை வாட்டி வதைக்கின்றது. கேள்விகள் மோதியவண்ணமிருக்கின்றன. சந்தேகங்கள் எழுந்த வண்ணமிருக்கின்றன. நிச்சயமின்மை நம்மை ஆட்டிப்படைக்கின்றது. என்னிடம் திருப்திகரமான விளக்கம் இல்லை. ஆனாலும் நம்மெல்லாருக்கும் உதவக்கூடிய ஓரிரு திருமறைச் சத்தியங்களை இங்கு உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன் —

■ தேவனது பிள்ளை எவருக்கும் அகால மரணம் (untimely death) என்பது கிடையாது. நமது பிறப்பு நாளும் இறப்பு நாளும் ஏற்கனவே தேவனது அநாதி ஞானத்தினால் திட்டமிடப்பட்டுவிட்டன. எனவேதான் திருப்பாடகன் தாவீது அறிக்கையிட்டது: ''நானோ, கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; நீரே என் தேவன் என்று சொன்னேன். எனது காலங்கள் உமது கரத்தில் இருக்கின்றன'' (சங் 31:14.15). தேவன் நியமித்த நேரத்திற்கு ஒரு நிமிடம்கூட முந்தியோ பிந்தியோ அவரது பிள்ளைகள் எவரும் இறப்பதில்லை. இதோ, அவர் விடும் சவால்: ''தாயானவள் தனது கருவறையிலிருந்து வந்த பிள்ளைக்கு இரங்காமல், தனது பாலகனை மறப்பாளோ? அவள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் சுவர்கள் எப்பொழுதும் எனக்குமுன் இருக்கின்றன'' (ஏசா 49:15,16). யோவான் 10ஆம் அத்தியாயத்தில் இயேசுவானவர் தம்மை நல்ல மேய்ப்பராய் அறிமுகம் செய்கையில் இவ்வாக்கினைத் திரும்பச் சொன்னார். அவரது ஆடுகளாகிய நம்மைக் குறித்து அவர் வாக்களித்தது: ''நான் அவற்றிற்கு நித்திய வாழ்வைக் கொடுக்கிறேன்; அவை ஒருபோதும் அழிவதில்லை; ஒருவரும் அவற்றை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை. அவற்றை எனக்குத் தந்த தந்தையானவர் எல்லாரையும்விடப் பெரியவராயிருக்கிறார்; அவற்றை அவரது கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவராலும் முடியாது!'' (வச 28,29). இங்கிருந்தாலும், அங்கு சென்றுவிட்டாலும், நாம் அவரது கைகளில் பத்திரமாயிருக்கிறோம். இவ்வுலகில் அவர் நம்முடன் இருக்கிறார்; அவ்வுலகில் நாம் அவருடன் இருப்போம் (மத் 28:20ஆ; 2 கொரி 5:8; 1 தெச 4:17ஆ).

■ ஏசாயா 57:1,2இலுள்ள சத்தியம் நமக்குத் திருப்தியாகவும் ஆறுதலாகவும் இருக்கிறது: ''இறைப்பற்றுள்ளோர் எடுத்துக்கொள்ளப்படுகின்றனர்; அதைக் கருத்தில் கொள்வார் எவருமில்லை; தீயது வருவதற்கு முன்னரே நீதிமான் எடுத்துக்கொள்ளப்படுகிறான் என்பதையும் சிந்திப்பார் எவருமில்லை. நேர்மையாய் நடந்தோர் சமாதானத்திற்குள் சென்றடைந்து, தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகின்றனர்.'' பிறப்பிலிருந்து இறப்பு நோக்கிய பயணமே வாழ்க்கை என்பது. நம்மை விண்ணகத்திற்கு அழைத்துக்கொள்ள மிகச் சிறந்த வேளை எதுவென்று தேவனுக்குத் தெரியும். ஒரு நிமிடமோ ஒரு நாளோ நாம் கூடுதலாய்ப் பிழைத்திருந்தால் அது நமக்கோ, உற்றாருக்கோ, சபைக்கோ, சமுதாயத்திற்கோ நலமன்று என்பதை அவர் அறிவார். தொடக்கம் முதல் முடிவை அறிந்தவர் அவரன்றோ? இதோ, அவர் சொல்வது: ''தொன்றுதொட்டு நிகழ்ந்தவற்றை நினைத்துப்பாருங்கள்; நானே தேவன், எனக்குச் சமமானவர் எவருமில்லை. இறுதியில் நிகழவிருப்பவற்றைத் தொடக்கத்திலேயே அறிவித்தேன்; இனி நடப்பனவற்றைப் பண்டைக்காலத்திலேயே முன்னுரைத்தேன்; 'என் திட்டமே நிலைத்திருக்கும்; என் விருப்பத்தையே நிறைவேற்றுவேன்' என்றுரைத்தேன்'' (ஏசா 46:9,10). இன்றுள்ளதிலேயே (immediate) நமக்கு ஆர்வம்; தேவனோ முடிவாயிருக்கப்போவதையே (ultimate) கருத்தில் கொண்டுள்ளார். நாம் ஒவ்வொன்றையும் தனித்தனியாய்ப் பார்க்கிறோம்; அவரோ அனைத்தையும் ஒன்றுசேர்த்துப் பார்க்கிறார். எனவே பவுலடியாருடன் சேர்ந்து நாம் செய்யவேண்டிய அறிக்கை: ''தேவனது தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் அவரிடம் அன்பு செலுத்துவோருக்கு அனைத்தும் (ஒருங்கிணைந்து) நன்மைக்காகவே நடக்கிறது'' (ரோ 8:28).

தனது மரணம் அல்லது கிறிஸ்துவின் மறுவருகையைக் குறிப்பிட்டுப் பழம் பரிசுத்தர் ஒருவர் காலையில் எழும்போது, *''இன்று இருக்கலாம்''* (May be today!) என்றும், படுக்கைக்குச் செல்லும்போது, *''இன்றிரவு இருக்கலாம்''* (May be tonight!) என்றும் சொல்வாராம்!

(''இறப்பின் இலாபங்கள்'' என்ற வேத ஆராய்ச்சிக் குறிப்பு ஆங்கிலம், தமிழ், இந்தி ஆகிய மொழிகளிலும், *''எப்படி இறக்கக்கூடாது?''* என்ற 100-பக்கக் குறுநூல் ஆங்கிலத்திலும் தமிழிலும், StanleyOnBible.com என்ற இணையதளத்திலுள்ள Online Letter162இல் இலவசமாய்ப் பதிவிறக்கம் செய்ய இணைக்கப்பட்டுள்ளன.)

R. Stanley, 13 Church Colony, Vellore 632 006, India

Tel: 00 91 98437 07600, 98430 11943 (WhatsApp)

<stanleyonbible@hotmail.com> <evangelinestanley1@gmail.com>

www.StanleyOnBible.com ***YouTube: Stanley On Bible***